**கவனிக்க .**- 17.05.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1812 - 2013 මැයි මස 23 වැනි වැනි බ්‍රහස්පතින්දා - 2013.05.23

1812 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1482 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**கவனிக்க.**- (i) ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) தொலைத் தொடர்பு அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாண மாகாண சபை

*2013 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க தென் மாகாண சபைகள் பொருட்கள் ஈடுபிடிப்பவர்கள் நியதி சட்ட நகல்*

தென் மாகாண முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும் போக்குவரத்து, நீர் விநியோக, வடிகாலமைப்பு, மின்சக்தி, பொறியியல் சேவை, சுகாதார, சுதேச வைத்தியம் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப்பொறுப்பான அமைச்சராகிய திரு. குஸ்திஞ்ஞாவடு ஷான் விஜயலால் த சில்வா என்ற பெயருடைய நான், இங்கு பிரசுரிக்கப்பட்ட தென் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க தென் மாகாண பொருட்கள் ஈடுபிடிப்பவர்கள் நியதிச் சட்ட நகலை இவ்வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு கிழமைகள் சென்றதன் பின்னர் தென் மாகாண சபைக்கு முன்வைக்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். எவருக்காவது இந்நியதிச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் பற்றி முன்வைப்பதற்கு ஏதாவது விடயங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின் அவ்விடயங்கள் பற்றி அல்லது திருத்தங்கள் பற்றி இக்காலப்பகுதிக்குள் எனக்கு சமர்ப்பிக்க முடியும்.

குஸ்திஞ்ஞாவடு ஷான் விஜயலால் த சில்வா,<br>
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,<br>
போக்குவரத்து, நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு, மின்சக்தி<br>
பொறியியல் சேவை, சுகாதார, சுதேச வைத்திய மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,<br>
தென் மாகாணம்.

முதலமைச்சர் அலுவலகம்,<br>
காலி,<br>
2013, ஏப்பிறல் 24.

**பொருட்களை அடகு பிடிப்பவர்களின் வியாபாரத்தை முறைப்படுத்துவதற்காகவும், அதற்கு நேர் எதிர் விளைவுடைய அல்லது அது சம்பந்தப்பட்ட வேறு விடயங்கள் சம்பந்தமாகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்கான நியதிச் சட்டமொன்று; இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை 1942 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கம் கொண்ட பொருட்களை அடகு பிடிப்பவர்களுடைய ஆணைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகும்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாண மாகாண சபையால் இவ்வாறு சட்டமாக்கப்படுகின்றது:

*சுருக்கப்பெயரும் நடைமுறையாகும் திகதியும்.*

1. இந்நியதிச் சட்டம் தென் மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் ... ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன், ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற திகதியிலிருந்து நடைமுறையாகின்றது.

### 1 ஆவது பகுதி

### பொருட்களை அடகு பிடிப்பவர்களின் கருமங்கள்

*பொருட்களை அடகு பிடிப்பவர்களின் வியாபாரத்தை நடாத்துவது சில நபர்களுக்குத் தடையாகும்.*

2. எவரொருவராவது :-

(i) இலங்கையின் பிரசை அல்லாத ஒருவர், அல்லது<br>
(ii) வெளிநாட்டுக் கம்பனி ஒன்றாயின், அல்லது<br>
(iii) வெளிநாட்டு வியாபார நிறுவனம் ஒன்றாயின்

குறித்த தினத்தில் அல்லது இதன் பின்னர் அந்நபரால் அடகு பிடிப்பவரால் அடகு பிடிப்பவர்களின் வியாபாரமொன்றைச் செய்தல் கூடாது. இதன் பிரகாரம் அவ்வியாபாரத்தைச் செய்வதற்கு எந்தவொரு நபருக்காவது, வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுக்கோ, வெளிநாட்டு வியாபார நிறுவனமொன்றுக்கோ விநியோகஞ் செய்யப்பட்டிருக்கும் அக்குறித்த தினத்திற்கு முன்னரான தினத்தில் செல்லுபடியாகக் கூடியதான அனுமதிப்பத்திரம் ஒன்று குறித்த தினத்திலிருந்தும் அதன் பின்னரும் செல்லுபடியற்றதெனவும் அதிகாரம் அற்றதெனவும் அனைத்து கருமங்களிலும் கவனிக்கப்படல் வேண்டும்.

*பொருட்களை அடகு பிடிப்பவரின் அனுமதிப் பத்திரம்.*

3.(1) எந்தவொரு பொருட்களையும் அடகு பிடிப்பவரின் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் அனைத்து கடைகள் அல்லது கிளைகள் என்பவற்றிற்குத் தனித் தனியாக பிரதம செயலாளர் அவர்களால் விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் இருந்தாலன்றி எவராலும் பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரத்தைச் செய்தல் கூடாது.

(2) இப்பிரிவின் கீழ் விநியோகிக்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்களும் இதில் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள "அ" மாதிரிப் படிவத்தின் பிரகாரம் இருத்தல் வேண்டும்.

(3) அனைத்து அனுமதிப்பத்திரங்களும் திகதியாக அது விநியோகஞ் செய்யப்படும் திகதியைக் கடைப்பிடிக்க வேண்டியதுடன் அதன் பின்னர் வரும் டிசெம்பர் மாதம் 30 ஆந் திகதியுடன் அதன் செல்லுபடியாகும் காலம் முடிவடைகின்றது.

4. 3 ஆவது பிரிவின் கீழ் விநியோகஞ் செய்யப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றை எவ்வியாபாரத்திற்கு உரியதாயினும் பிரதம செயலாளரின் எழுத்தினாலான முன் அனுமதியைப் பெறாமல் அவ்வனுமதிப் பத்திரத்தை அனுமதிப் பத்திரமுடையவரால் வேறொருவருக்கு உரித்தாக்கல் கூடாது.

பிரதம செயலாளரின் முன் அனுமதியின்றி வியாபாரத்தை கையளித்தல் கூடாது.

5. பிரதம செயலாளர் அவர்களால் 3 ஆவது பிரிவின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற குறித்த அனுமதிப் பத்திரத்தின் பிரதி ஒன்றை அவ்வனுமதிப் பத்திரத்திற்குரிய வியாபாரத்தை நடாத்துகின்ற பிரதேசத்தின் பிரதேசத்திற்குப் பொறுப்புடைய பொலிஸ் அதிகாரிக்கும் அவ்வதிகாரியால் உரிய வட்டார பொலிஸ் நிலையத் தலைவருக்கு அதன் பிரதி ஒன்றை அனுப்புதல் வேண்டும்.

அனுமதிப் பத்திரத்தின் பிரதி ஒன்று பொலிஸ் அதிகாரிக்கு அனுப்புதல் பற்றியது.

6. (1) பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் ஒன்றை பெறுவதற்கு எதிர்பார்க்கும் ஒவ்வொருவராலும் அதற்கான விண்ணப்பப் பத்திரத்தை பிரதம செயலாளருக்கு முன்வைத்தல் வேண்டும். எந்தவொரு பொருட்களையும் அடகு பிடிக்கும் வியாபாரத்தை நடாத்திச் செல்பவரால் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகள் அல்லது கிளைகள் நடாத்துவதாயின் அப்போது அக்கடைக்கு அல்லது கிளைக்கு தனித்தனியாக விண்ணப்பங்களை பிரதம செயலாளருக்கு முன்வைத்தல் வேண்டும்.

அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்தல்.

(2) அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பபத்திரத்திற்கும் உரிய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்யப்படல் வேண்டும்.

(3) இன்னும் இவ்வனுமதிப் பத்திரத்திக் கட்டணங்கள் நிதி விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களால் வர்த்தமானி பத்திரிகையில் (கசெற்றில்) பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மூலம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாற்றஞ் செய்ய முடியும்.

(4) வருடத்திற்குரிய அனுமதிப்பத்திரத்தை உரிய தினத்திற்குப் புதுப்பித்தல் செய்யாது பொருட்கள் அடகு பிடிப்பாளர் வியாபாரத்தை நடாத்திய அடகு பிடிக்கும் வியாபாரிக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்று விநியோகஞ் செய்வதாயின், அனுமதிப்பத்திரமின்றி பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தை நடாத்திச் சென்ற ஒவ்வொரு வருடத்திற்குரிய அனுமதிப்பத்திரக் கட்டணமும் வியாபாரத்தை நடாத்திச் சென்ற ஒவ்வொரு மாதத்திற்குமான 10% தாமதக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.

(5) விண்ணப்பதாரரால் அனுமதிப்பத்திரம் விநியோகஞ் செய்யப்பட முன்னர் ஏதாவது சட்ட விரோதமான அல்லது அநீதியான கருமங்கள் எதுவும் செய்யவில்லை என சத்தியப் பிரமாணம் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7. 2 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்துவதன் காரணமாக பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரம் நடாத்துவது தடையாகும் எந்தவொரு நபருக்கும் பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரத்தைச் செய்து கொண்டு போவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றை உரிய தினத்தில் அல்லது அதன் பின்னர் விநியோகஞ் செய்யக்கூடாததுடன் அவ்வாறின்றேல் எவரொருவருக்காவது விநியோகஞ் செய்யப்பட்ட ஏதாவது அனுமதிப்பத்திரம் ஒன்று அதன் பிரகாரம் செயலற்றதாக்கின்றது. இன்னும் அதிகாரமற்றதாகின்றது என்பதை சகல விடயங்களிலும் கவனித்தல் வேண்டும்.

சில நபர்களால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தலை தடை செய்தல்.

8 (1) எவரொருவராவது பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரம் ஒன்றைச் செய்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிக்கும் படி விண்ணப்பிக்கின்ற தினத்திற்கு முன்னைய ஐந்து வருடங்களுக்குள் எச்சந்தர்ப்பத்திலோ குற்றவியல் கோவை xi, xiii, xvii அல்லது xviii ஆகிய பந்திகளில் கீழான அல்லது இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான தண்டனைகளை அளிக்கக்கூடிய ஏதாவது குற்றமொன்றுக்கு குற்றவாளியாக இருப்பின் அல்லது :

அனுமதிப்பத்திரம் ஒன்றுவிநியோகிப்பதை நிராகரித்தல்.

(ஆ) 46 (2) பிரிவின் பிரகாரம் வருடாந்தக் கணக்கு அறிக்கையை முன்வைக்காத ஒருவராக இருப்பின்,

பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரமொன்றைச் செய்வதற்கு உரிய அனுமதிப்பத்திரம் அந்நபருக்கு விநியோகித்தல் கூடாது.

9. 3 ஆவது பிரிவின் கீழ் விநியோகஞ் செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒருவர் அவ்வனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவ்விண்ணப்பப் பத்திரத்தை விண்ணப்பிக்க முன்னர் ஏதாவது ஒரு கால வரையரைக்குள் அனுமதிப்பத்திர அதிகாரமுடையவரால், பொருட்களை அடகு பிடிக்கும் என்ற வகையில் தமது வியாபாரம் சம்பந்தமாக இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்குப் பாதகமான கருமங்களில் ஈடுபட்டிருப்பதாக பிரதம செயலாளர் திருப்தியுறுவாராயின் அவ்வனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தலை அவரால் நிராகரிக்க முடியும். அவ்வாறு செய்யும் சந்தர்ப்பத்தில் அதற்கான காரணங்களை 30 நாட்களுக்குள் அந்நபருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல்.

10. (1) அனுமதிப்பத்திரம் ஒன்று செல்லுபடியற்றதாக்குதல் காரணமாக அல்லது நிராகரித்தல் காரணமாக திருப்தியுற்றதாக காட்சியாளர்களால் அம்முடிவுக்கு எதிராக 30 நாட்களுக்குள் மேன்முறையீட்டு சபைக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

மேன்முறையீடு.

(2) அம்மேன்முறையீடு சபை ஆளுநர் அவர்களால் நியமனஞ் செய்யப்படுகின்ற ஓய்வு பெற்ற இரு நீதிபதிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

அனுமதிப்பத்திரம் விநியோகஞ் செய்ய முன் பிணை வைத்தல் வேண்டும்.

11. பிரதம செயலாளரால் உத்தரவிடப்படும் ஓர் இலட்சம் ரூபா பணமாக பிணையாக வைக்காத எந்த ஒருவருக்கும் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படமாட்டாது.

அனுமதிப்பத்திர உரித்தாளர் இலங்கைக்கு வெளியே இருக்கும் போது அது பற்றி அறிவித்தல் வேண்டும்.

12. 03 மாதங்களுக்கு கூடுதலான காலமொன்று இலங்கைக்கு வெளியே சென்றிருப்பதற்கு எதிர்பார்க்கும் பொருட்களை அடகு பிடிக்கும் அனைவராலும்,

(அ) அது பற்றி பிரதம செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும், இன்னும்,

(ஆ) தான் இலங்கைக்கு வெளியே வசிக்கும் காலத்தினுள் தனக்காக அவ்வேலைகளைச் செய்வதற்கு (பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரத்தைச் செய்வதற்கான இந்நியதிச் சட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு தகைமை உடைய ஒருவரான) ஒருவரை நியமிக்க வேண்டியதுடன், அவ்வாறு நியமனம் செய்யப்பட்டவரின் பெயரை பிரதம செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய நேரம்.

13. எத்தினத்திலாவது முற்பகல் 8.00 மணிக்கு முன்னர், பிற்பகல் 8.00 மணிக்குப் பிறகும் எப்பொருட்களையும் அடகுக்கு பொருட்களை அடகு பிடிப்பவர் பெறுதல் கூடாது.

பொருட்களை அடகு பிடிப்பவர் ஏலவிற்பனையாளராக செயற்படல் கூடாது.

14. ஏல விற்பனையாளராகச் செயற்படுவதற்கே ஏல விற்பனையாளரின் வியாபாரத்தைச் செய்வதற்கு பொருட்களை அடகு பிடிக்கும் ஒருவரால் முடியாது.

பொருட்களை அடகு பிடிப்போரால் அறிவித்தல்களை காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

15. பொருட்களை அடகு பிடிப்பவர்களாலும்:-

(அ) தமது வியாபார நிலையத்தில் அல்லது உட்புகும் வழிக்கருகில் தெளிவாகத் தெரியக்கூடிய எழுத்துக்களால் தனது பெயர் மற்றும் "பொருட்களை அடகு பிடிக்கும்" என்ற வசனத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதி எல்லா நேரங்களிலும் காட்சிக்கு வைத்தல் வேண்டும். இன்னும்,

(ஆ) வியாபார நிலையத்திற்கு வருகின்ற அனைவருக்கும் தெளிவாகத் தெரியக்கூடிய விதத்திலும் அவ்வனைவராலும் வாசிக்கக்கூடிய விதத்திலும் இதன் மூன்றாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு விபரங்கள் அடங்கிய அறிவித்தல் ஒன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளாலும் அவ்வியாபார நிலையத்தில் பகிரங்கமாகத் தெரியக்கூடிய இடமொன்றில் எந்நேரத்திலும் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

விபரங்களை உட்புகுத்துவதற்காகப் பாவிக்கும் மொழி.

16. ஒரு புத்தகத்தின் மாதிரிப்படிவத்தில் அல்லது ஆவணத்தில் ஏதாவது விபரங்களை உட்படுத்த இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடாகியுள்ள சந்தர்ப்பத்தில் அவ்விபரங்களை சிங்களத்தில், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் உட்புகுத்துதல் வேண்டும்.

பொருட்களை அடகு பிடிப்பவர்களால் வைக்கப்பட வேண்டிய ஏடுகள்.

17. இதில் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள "அ" மாதிரிப் படிவத்தின் பிரகாரம் அடகுப் புத்தகமும் "ஆ" மாதிரிப் படிவத்தின் பிரகாரம் பண்டங்கள் விற்பனை புத்தகமும் பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரிகளால் வைத்திருத்தல் வேண்டும். இன்னும் உட்புகுத்தப்படுவதற்கு அப்படிவங்களில் ஏற்பாடுகள் செய்துள்ள அனைத்து விபரங்களையும் சிறந்த முறையிலும் தெளிவாகவும் பதியப்பட வேண்டியதுடன் அக்கருமங்களுக்காகத் தேவைப்படுகின்ற விசாரணைகளும் அவரால் செய்தல் வேண்டும்.

அடகுச் சீட்டு.

18. (1) அனைத்து அடகுத் துண்டுகளும் இதில் இரண்டாவது அட்டவணையில் "இ" மாதிரிப் படிவத்தில் காட்டப்பட்டுள்ள பிரகாரம் முதற் பிரதியுடனும் இணைப் பிரதியுடனும் அப்படிவத்தில் உட்புகுத்த வேண்டிய படி ஒழுங்காக எழுதி கையொப்பமிடப்படல் வேண்டும்.

(2) இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அடகுத் துண்டினதும் மூலப் பிரதியினதும் பின் பக்கத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வாசிக்கக்கூடிய பிரகாரம் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அடகுப் பொருளொன்று ஆயிரம் ரூபாவிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட பணத்தொகை ஒன்றுக்கு அடகுவைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அப்பொருளுக்கு உரிய அடகுச் சீட்டின் முதற் பிரதியில் பணத்தின் பெறுமதிக்குரிய முத்திரை ஒட்டப்படல் வேண்டும். அம்முத்திரைக்குரிய விநியோகத்திற்காக செலுத்தும் செலவு அடகு எடுக்கும் வியாபாரி பொறுப்பேற்றல் வேண்டும்.

(4)(அ) பொருட்களை அடகு வைக்கும் நபரால் அடகுச் சீட்டின்இணைப்பிரதியில் கையொப்பம் இட்டாலன்றி மற்றும் கையொப்பம் இடும் வரையும்;

(ஆ) அடகு எடுக்கும் வியாபாரியால் அடகுச் சீட்டின் இணைப் பிரதியில் கையொப்பமிட்டு அதை அடகு வைத்தவருக்கு கொடுத்தால் மற்றும் கொடுக்கும் வரையும்,

(இ) பொருளை அடகு எடுப்பவரால் அடகுச் சீட்டின் முதற் பிரதியில் பொருளை அடகு எடுப்பவரிடமிருந்து பெற்றுஅவர் அதனை ஏற்றுக் கொண்டாலன்றி மற்றும் ஏற்றுக் கொள்ளும் வரையும்,

எந்தவொரு பொருளும் அடகு எடுக்கக் கூடாததுடன், அடகு எடுத்தாற் போல் கவனத்தில் எடுக்காதிருத்தல் வேண்டும்.

19. பொருள் அடகு எடுக்கும் எவராலும் அடகு வைப்பவர்களின் பேரில் கொடுக்கப்படுகின்ற கடனுக்காக மூன்றாவது அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்கு கூடுதலான வட்டியை அறவிடல் கூடாது. வட்டி வீதம்.

அவ்வாறாயினும், ஏதாவது ஒரு பொருளை அடகு பிடித்து அதன் பேரில் கொடுக்கப்படுகின்ற கடனுக்காக உரிய வரியொன்று செலுத்த வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அடகு எடுப்பவரால் அவ்வரியை அடகு வைப்பவரிடமிருந்து அறவிடுகின்ற பிரிவுக்கு முன்னதாக ஏற்பாடுகளில் உள்ளடங்கிய எதனாலும் தடையாகும் வண்ணம் கவனிக்கப்படலாகாது.

இப்பிரிவு "அடகுப் பொருள்" என்பதற்கு அடகு வைக்கப்பட்டதும் குறித்த தினத்திற்கு முன்னர் மீட்கப்படாததுமான பொருள் (பண்டம்) உள்ளடங்கும்.

## 2 ஆவது பகுதி

## அடகுக்கு உள்ளடங்கும் பொருட்கள்

20. எல்லா பொருட்களும் அதனை அடகு வைத்த தினத்திலிருந்து வருகின்ற பன்னிரெண்டு மாதங்களுக்குள் (இந்நியதிச் சட்டத்தின் இதன் பின்னர் "மீட்கப்படுகின்ற காலம்" எனக் குறிப்பிடப்படுகின்ற) மீட்கப்படுதல் வேண்டும். அடகு வைக்கப்பட்ட திகதியைத் தவிர்த்து இக்காலப் பகுதியை கணக்கிடல் வேண்டும். வருடத்தினுள் அடகுக்குள்ளடங்கிய பொருட்கள் மீட்கப்படல் வேண்டும்.

21. இந்நியதிச் சட்டத்தில் வேறொரு இடத்தில் இது சம்பந்தமாக எதுகுறிப்பிடப்பட்டிருப்பினும் அனைத்து அடகுக்குள்ளாகும் பொருட்களும், அது மீட்கப்பட வேண்டிய காலவரையரை கடந்திருப்பினும், இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள பிரகாரம் அதனை வெளிப்படுத்த முன்னர் மீட்டியெடுக்க முடியுமாகின்றது. அடகு வைக்கப் பட்ட பொருளை மீட்டி ஒடுக்க முடியும்.

22. (1) ஒரு அடகுப் பொருளுக்குரிய அடகுச் சீட்டின் மூலப் பிரதியை அடகு வைப்பவரால் அடகு எடுத்தவருக்குக் கொடுத்து பொருளை அடகு எடுத்தவர் அல்லது அவரது பிரதிநிதி அல்லது அவரது ஊழியர் முன்னிலையில் அம்மூலப் பிரதியில் கையெழுத்திட்டு தான் என்பதை நிரூபிப்பின், அப்பொருளை மீட்டியெடுக்கும் உரிமை அடகு வைத்தவருக்கு உண்டு. அடகுப் பொருட்களை மீட்டி எடுக்கும் வழிமுறைகள்.

(2) பொருளை அடகு வைத்தவர் அல்லாத வேறொருவர் ஏதாவதொரு அடகுப் பொருளுக்குரிய சீடடின் முதற் பிரதியில் அவ்வடகுப் பொருளை அடகு வைத்தவருடைய ஒப்பத்துடன் ஏற்புடையவாறு மீள ஒப்பம் பெற்று அம்மூலப் பிரதியை பொருளை அடகு எடுத்தவருக்கு முன்வைக்கப்படின் மற்றும் அவரால் அடகு எடுத்தவர் அல்லது அவரது பிரதிநிதி அல்லது அவரது சேவைகள் முன்னிலையில் அம்மூலப் பிரதியில் கையொப்பமிட்டால் மற்றும் தான் என்பதை நிரூபிப்பின் அவ்வடகுப் பொருளை மீட்டெடுக்கும் உரிமை அந்நபருக்குள்ளது.

(3) அடகு வைத்தவரின் மரணம் காரணமாக அல்லது அவரது சட்டரீதியான இயலாமை காரணமாக அல்லது அப்பொருளை மீட்டியெடுக்கும் உரிமை தனக்குள்ளது என்பதற்கான அப்பொருளுக்குரிய அடகுச் சீட்டின் மூலப்பிரதியை உடைய (இப்பிரிவின் இதன் பின்னர்) "உடையவர்" எனக் குறிப்பிடப்படும் நபரால் சொல்லப்படுகின்ற ஆனாலும் அடகு வைப்பவரின் ஒப்பத்தால் உரிய பிரகாரம் மீள ஒப்பமிடப்பட்டு (அதிகாரமளிக்கப்பட்டு) அடகுச் சீட்டின் மூலப் பிரதியை அடகு எடுப்பவர் இடத்தில் முன்வைக்க முடியாத சந்தர்ப்பத்திலும் அது உடையவரால் இதில் இரண்டாவது அட்டவணையில் "ஈ" படிவத்தின் பிரகாரம் சமாதான நீதவான் முன்னிலையில் உரிய பிரகாரம் வெளியாகும் சத்தியக் கடதாசியுடன் அடகுப் பொருளுக்குரிய அடகுச் சீட்டின் முதற் பிரதியை அது உடையவரால் அடகு எடுத்தவருக்கு சமர்ப்பிப்பின் அவ்வடகுப் பொருளை மீட்டி கொள்வதற்கு அடகு எடுப்பவரால் இடமளித்தல் வேண்டும்.

(4) 1ஆவது,2 ஆவது மற்றும் 3 ஆவது உப பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய அடகு வைக்கப்பட்ட பொருள் சம்பந்தப்பட்ட கடன் மற்றும் அதற்காக அறவிடப்பட வேண்டிய வட்டியும் அக்கடனுக்காகச் செலுத்தப்பட வேண்டிய வரிகள் இருப்பின் அறவிட்டு அடகுச் சீட்டு முன்வைக்கப்படும் பொருள் அடகு வைத்தவருக்கு அல்லது சீட்டை வைத்திருப்பவருக்கு அப்பொருளைக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறாயினும் அடகுச்சீட்டை வைத்திருப்பவர் அதைக் களவாடி அல்லது வேறொரு விதத்தில் சட்ட விரோதமாகத் தனதாக்கிக் கொண்டுள்ளார் என சந்தேகப்பட அடகு

எடுத்தவருக்குக் காரணங்கள் இருப்பின், அடகு எடுத்தவரால் உடனடியாகப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடத்திற்கு அல்லது கிராம உத்தியோகத்தர் ஒருவரிடத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

அடகுப் பொருளின் பெறுமதியைத் தேடுதல் பற்றிய நஷ்டஈடு.

*23.* அடகுப் பொருளொன்றை மீட்டுவதற்கு உரித்துடையவரும் அதை மீட்டுவதற்கு முன்வருபவருமான ஒருவரால் அப்பொருளை அடகு வைக்கும் போது இருந்த அதன் பெறுமதியை அடகு எடுப்பவரின் தவறு அல்லது கவனயீனம் காரணமாக அல்லது வேண்டுமென்றே முரண்படுத்தி குறைவான பெறுமதி உள்ளதெனவும் அல்லது குறைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் அறியப்படுமிடத்து அது பற்றி உரிய நீதி அதிகாரமுடைய நீதிமன்றமொன்றுக்கு முறையீடு செய்யப்படுவதன் மூலம் நஷ்டஈட்டைப் பெறுவதற்கு அடகு வைப்பவருக்கு உரிமையுள்ளது.

அடகுச் சீட்டு இல்லாத பொருட்கள் உரிமையாளருக்கும் மற்றும் வைப்பவருக்கும் பாது காப்பு ஏற்பாடுகள்.

*24.* (1) தான் ஏதாவது பொருளொன்றின் உரிமையாளர் எனக் கூறுகின்ற ஆனாலும் அடகுச் சீட்டின் மூலப் பிரதி உடையவரல்லாத ஒருவரால் அல்லது அடகுச் சீட்டின் மூலப்பிரதியை தன்வசமிருக்கச் செய்ய உரிமை உண்டெனவும் எனினும் மூலப் பிரதி காணாமல் போய் களவாடப்பட்டு இல்லாமற்போய் அல்லது அழிந்து போய் அல்லது ஏமாற்றி எவராலும் எடுக்கப்பட்டு உள்ளன என முறையீடு செய்யும் ஒருவரால் இதில் இரண்டாவது அட்டவணையில் ''ஏ'' படிவத்தின் பிரகாரம் சமாதான நீதவான் முன்னிலையில் தாமும் தன்னை நிரூபிக்கும் சாட்சி கூறுபவராலும் ஏற்ற பிரகாரம் செய்யப்பட்ட சத்தியத்தின் மூலமும் அவ்வடகுச் சீட்டினை அடகு எடுப்பவர் முன்வைத்தால் கிடைக்கின்ற அனைத்து உரிமைகளும் செயற்பாடுகளும் அவ்வடகு வைப்பவர்களுக்கிடையில் ஏற்படுகின்றது. அவ்வாறாயினும் பொருளை மீட்டியெடுக்கும் கருமத்தில் அவரால் அடகுச் சீட்டில் கையொப்பமிடப்படல் வேண்டும்.

(2) மேற்குறித்த பிரகடனம் அதில் அடங்கியுள்ள முக்கியமான தகவல்கள் சம்பந்தமாக அல்லது பொய்யான சந்தேகமான அறிவித்தல் ஒன்று அடகு எடுத்தவருக்கு கிடைத்தில்லாதவிடத்து பொருளை ஒப்படைத்தல் கொடுத்தல் அல்லது பிரகடனத்தின் பிரகாரம் வேறொரு விதத்தில் செயற்படுதல் சம்பந்தமான பொறுப்பிலிருந்து பொருளை அடகு எடுப்பவர் போல் பாதுகாக்கப்படுகிறார்.

பொருளை மீட்டி எடுத்தல் அல்லது விற்றதன் பின்னர் அடகுச் சீட்டு அடகு எடுத்தவரால் வைத்திருத்தல் வேண்டும்.

*25.* (1) பொருளை மீட்டியெடுக்கும் கருமத்திற்காக அடகுச் சீட்டின் மூலப் பிரதியை அடகு எடுப்பவருக்குக் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் அப்பொருளை மீட்டெடுத்த திகதி முதல் கணக்கெடுக்கப்படும் 24 மாதங்கள் கழிவும் வரை பொருள் அடகு எடுப்பவரால் அவ்வடகுத் துண்டின் மூலப் பிரதியும் இணைப்பிரதியும் அடகு பிடிப்பவர் வசம் வைத்திருத்தல் வேண்டும்.

(2) பொருளுக்குரிய அடகுச்சீட்டின் மூலப்பிரதியை முன்வைக்காது பொருளை மீட்டியெடுத்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு அப்பொருளை மீட்டியெடுத்த திகதி முதல் கணக்கெடுக்கப்படுகின்ற 24 மாதங்கள் கழியும் வரை அப்பொருளுக்குரிய அடகுத் துண்டின் இணைப் பிரதியையும் அதை மீட்டுவதற்காக 24 வது பிரிவின் கீழ் தமக்கு கொடுக்கப்பட்ட சத்தியப் பிரமாணக் கடிதத்தை (வெளிப்படுத்துதலை) அடகு வைப்பவர் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

(3) எவராவது ஒருவரால் பொருள் அடகு (பிடிப்பவர்) எடுக்கும் வியாபாரத்தைக் கைவிட்ட சந்தர்ப்பத்தில் அவரால் வைக்கப்பட்டுள்ள பிணைப் பணத்தில் (1) வது உப பிரிவில் குறிப்பிட்டுள்ள நஷ்டஈட்டுக்காக செலுத்த வேண்டிய ஏதாவது தொகையை குறைத்து மீதியுள்ள பணத்தை அப்பொருள் அடகு எடுக்கும் நபருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

பொருட்கள் அடகு பிடிப்பவர்களால் வைக்கப்பட்ட பிணைப் பணத்தை ஈடு படுத்தலும் மீளளித்தலும்.

*26.* (1) ஏதாவது ஒரு பொருள் எந்தவொரு அடகு பிடிப்பவரிடம் அடகு வைக்கப்பட்டிருக்கும் போது நிச்சயிக்கப்பட்ட நிலைமையின் கீழ் அப்பொருள் காணாமற் போன சந்தர்ப்பத்தில் அப்பொருளை அடகு எடுத்தவரால் வைக்கப்பட்டுள்ள பிணையை பொருளை அடகு வைத்தவருக்கு அல்லது பொருளை மீளப் பெற உரித்துடையவருக்கு நஷ்டஈடு செலுத்துவதற்காக உரியவாறு ஈடுபடுத்தல் வேண்டும்.

(2) மேலே (1) வது உப பிரிவின் கீழ் செலுத்தப்படுகின்ற நஷ்டஈட்டுப் பணம் காரணமாக வைக்கப்பட்டுள்ள பிணைப் பணத்தில் குறைவாகும் தொகையை அடகு எடுப்பவரால் பிணையாக மீண்டும் செலுத்துதல் வேண்டும். அவ்வுப பிரிவின் கீழ் செலுத்த வேண்டிய நஷ்டஈட்டுப் பணம் வைக்கப்பட்டுள்ள பிணைப் பணத்தை விடக் கூடிய தொகையாயின், அப்போது நஷ்டஈடு பெற அருகதையுடையவருக்கு செலுத்தவதற்காக அவ்வாறு கூடுதலாகும் பணத்தொகையையும் குறித்த பிணைப் பணத்தையும் ஆகிய இரண்டையும் செலுத்தல் வேண்டும்.

(3) ஒருவரால் பொருள் அடகுப் பிடிக்கும் ஒருவராக வியாபாரத்தைச் செய்து கொண்டிருந்ததைக் கைவிடும் சந்தர்ப்பத்தில் அவரால் வைக்கப்பட்டுள்ள பிணைப் பணத்தின் (1) வது உப பிரிவில் குறிப்பிட்டுள்ள நஷ்டஈட்டைச் செலுத்துவதற்காக ஈடுபடுத்த வேண்டிய ஏதாவது பணத்தொகை இருப்பின் அதனைக் குறைத்து எஞ்சிய பணத்தை அப்பொருள் அடகு பிடிக்கும் வியாபாரத்தை நடத்தியவருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

தீ ஏற்படின் அப்போது அடகு எடுப்பவரின் பொறுப்பு.

*27.* (1) தீ அல்லது நெருப்பு காரணமாக அடகுப் பொருள் ஒன்று நாசமாகி அல்லது பொருளுக்கு பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அடகை விடுவிக்கும் கால எல்லைக்குள் கேட்கப்படின் கடனையும் வட்டியையும் அக்கடன் சம்பந்தப்பட்ட விற்பனை வரியையும் உரிய வேறு வரிகளையும் இருப்பின் அதனையும் குறித்து பொருளின் பெறுமதியை செலுத்துவதற்கு அடகு பிடிப்பவர் பொறுப்புடையவராவார்.

(2) அனைத்த அடகு பிடிப்பவர்களும் தன்னிடத்தில் அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் மொத்தமான பெறுமதி உள்ளடங்கும் படியாகத் தனது வியாபாரத்தை காப்புறுதி செய்து கொள்ள வேண்டும்.

28. அடகுப் பொருள் ஒன்றை மீளளிக்கப்படும் போது, பொருள் அடகு எடுத்தவருக்கு மீளச் செலுத்தப்பட்ட கடன் பணம் மற்றும் வட்டிப் பணம் மற்றும் அவரால் ஏதாவது வரி அறவிடப்பட்டிருப்பின் அவ்வரிக்காக இரண்டாவது உப அட்டவணையின் "ஏ" படிவத்தின் பிரகாரம் பற்றுச் சீட்டு ஒன்று அடகு எடுப்பவர்களாலும் விநியோகஞ் செய்தல் வேண்டும். இன்னும் அப்பற்றுச் சீட்டின் பிரதி ஒன்று அடகுப் புத்தகத்தில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். பொருட்கள் அடகு எடுப்பவரின் பற்றுச் சீட்டு.

29. (1) அடகை மீளளிக்கும் கால வரையரைக்குள் மீளப்பெறாத அனைத்து அடகுப் பொருட்களும் பகிரங்க ஏல விற்பனையில் விற்பதன் மூலம் வெளியேற்றப்பட முடியுமாயின், வேறு விதத்தில் செய்தல் கூடாது. மேலும் நான்காவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உத்தரவுகள் அவ்விற்பனையின் போது பின்பற்றப்படல் வேண்டும். பொருளை ஏலத்தில் விற்பனை செய்ய முடியும்.

(2) (1) உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொருள் ஒன்றை பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் போது அது பற்றிய அறிவித்தல் ஒன்றை இரண்டு மாதங்களுக்கு முன்னர் எழுத்து மூலம் அல்லது உரித்துடையவருக்கு அறிவித்தல் வேண்டும். இன்னும் அப்பொருள் அடகு எடுப்பவரால் அவ்விற்பனை நடைபெறும் திகதி, நேரம், இடம் என்பன பற்றிய எழுத்தினாலான அறிவித்தல் ஒன்றை குறைந்தளவில் இருபத்தொரு நாட்களுக்கு முன்னர் பிரதம செயலாளருக்கு அறிவித்து அதற்கு அனுமதியும் பெறப்படல் வேண்டும்.

30. இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவது, ஒரு பொருளை அடகு வைக்கும் ஒருவரின் பொருள் ஒன்றை விற்பனை செய்வதற்குரிய சந்தர்ப்பத்தில் அப்பொருளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்காக பிரதான செயலாளரின் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருடைய அனுமதியுடன் ஏலவிற்பனை நடைபெறும் திகதி, இடம் பற்றிய அறிவித்தல் ஒன்றை அத்தினத்திற்கு பதின்நான்கு நாட்களுக்கு முன்னர் அடகு பிடிப்பவரால் அப்பொருள் அடகு வைத்தவருக்கு அறிவித்தல் வேண்டும். விற்பனை பற்றிய அறிவித்தல்.

31. இந்நியதிச் சட்டத்தின் கீழ் பொருள் ஒன்று விற்பனை செய்யப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அப்பொருளின் பெயரில் கொடுக்கப்பட்ட கடன் தொகை அப்பொருளை விற்பனை செய்யும் நாள் வரை உள்ள அக்கடனுக்காக அறவிடவுள்ள வட்டி அக்கடன் சம்பந்தப்பட்ட வரிகள் இருப்பின், அவ்வரியையும் விஞ்சும் (கூடிய) பணத்தொகைக்கு அப்பொருளை விற்பனை செய்யப்பட்ட போது பொருள் அடகு எடுத்தவரால், அறவிட வேண்டிய வட்டி மற்றும் ஏதாவது வரியை விஞ்சும் பணத்திற்கு அப் பொருளை விற்பனை செய்தல் ஏற்பாட்டு முறை.

(அ) பொருளை விற்பனை செய்யப்பட்ட பணத்தொகை விற்பனைக்காக செலவு செய்த தொகை மற்றும் நிலுவையாகவுள்ள வட்டிக் கட்டணங்களையும் குறைத்ததன் பின்னர் அடகு வைத்தவரின் வரவில் வைக்கப்பட்டுள்ள பணத்தொகையை அப்பொருளை அடகு வைத்தவருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். இன்னும்,

(ஆ) விற்பனை செய்யப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கேட்டுக் கொள்ளப்படின், பொருள் அடகு வைப்பவரின் வரவில் வைக்கப்பட்டுள்ள பணம் அப்பொருளின் உரிய அடகுச் சீட்டு உள்ளவருக்குச் செலுத்துதல் வேண்டும். இன்னும்

(இ) குறித்த முப்பது நாட்களுக்குள் அவ்வாறான வேண்டப்படுதல் ஒன்று கிடைக்கப்பெறாவிடின் அக்கால வரையறை கடந்தவுடன் பொருள் அடகு வைத்தவரின் வரவில் உள்ள பணம் பொருள் அடகு வைத்தவரின் வரவுக்கு மாகாண சபையில் வைப்பு வைத்தல் வேண்டும்.

32. ஆயிரம் ரூபாவுக்குக் கூடிய பணத்தொகைக்கு அடகு வைக்கப்பட்டுள்ள பொருள் ஒன்று அதற்காகக் கொடுக்கப்பட்டிருந்த கடனும் மற்றும் விற்பனை செய்யும் திகதி வரை அதற்கு அறவிடப்பட வேண்டிய வட்டியும் கூடுதலாகின்ற பணத்திற்கு இக்காலத்தில் அதிகாரத்திலுள்ள சட்டத்தின் கீழ் உரிய தினத்திற்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பினும், பொருள் அடகு வைத்துள்ளவரின் வரவிலுள்ள பணத்திற்காக வேண்டப்படுதல் ஒன்று அப்பொருளுக்குரிய அடகுச் சீட்டு வைத்திருப்பவரால் அப்பொருளை விற்ற திகதியின் பின்னர் ஒரு வருடத்திற்குள் பொருள் அடகு வைத்தவருக்கு திரும்பக் கொடுபடாதிருப்பினும் மற்றும் குறித்த தினத்தில் அல்லது அதன் பின்னர் அவ்வருடத்தின் காலம் முடிவடையும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அக்காலம் முடிவடைந்தவுடன் பொருள் அடகு வைத்தவரால் அப்பணத்தை பொருள் அடகு வைத்தவரின் வரவில் மாகாண சபை திரட்டு நிதியில் வைப்புச் செய்தல் வேண்டும். குறித்த தினத்திற்கு முன்னர் அறவிட வேண்டிய பணமும் வட்டியும் கூடுதலாகும் பணத்திற்கு விற்பனை ஒன்றின் போது ஏற்பாட்டு வழிமுறை.

33. 29, 30 மற்றும் 31 ஆவது பிரவுகளின் கீழ் அனுப்பப்படுகின்ற அனைத்து அறிவித்தல்களும், பொருள்கள் புத்தகத்தில் உள்ளடங்கிய விலாசத்திற்கு பொருள் அடகு வைத்திருப்பவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டியதுடன் பதிவுத் தபால் கட்டணத்தை பொருள் அடகு வைத்தவரிடமிருந்து அறவிடல் வேண்டும். 29, 30, 31 பிரிவுகளின் கீழ் அறிவிக்கும் முறை.

34. பொருள் அடகு பிடிப்பவருக்கு அடகு வைக்கப்பட்டிருந்த பொருளொன்றை இந்நியதிச் சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட பகிரங்க ஏலவிற்பனையின் போது அவ்வடகு பிடித்தவரால் கேள்வி விலைக்கு வாங்கப்பட்டதன் பின்னர் அவர் விலைக்கு வாங்கப்பட்ட பொருளின் உத்தரவாளராவார். பொருள் அடகு பிடிப்பவரால் பொருள் வாங்கப் படுதல்.

### 3 ஆவது பகுதி

### பரிசீலித்தல், பரிசீலனையும் தடை உத்தரவும்

*விற்பனை புத்தக ஏடுகளை பரிசீலனை செய்யும் அதிகாரம்.*

35. பொருளொன்றை இந்நியதிச் சட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வருட கால எல்லைக்குள் எந்நேரத்திலானாலும் சரி அடகு பிடிப்பவரின் புத்தகத்தில் கையெழுத்திட்டு உறுதி செய்யப்பட்ட அவ்வேளை விற்பனை பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பெயர்ப் பட்டியலின் குறிப்புகளை அடகுச் சீட்டு வைத்திருப்பவரால் பரிசீலனை செய்ய முடியுமாவதுடன், அவ்விற்பனை சம்பந்தமாகப் பெயர்ப் பட்டியலின் குறிப்புகளைப் பரிசீலனை செய்ய அடகு பிடிப்பவரால் அடகுச் சீட்டு வைத்திருப்பவருக்கு அனுமதித்தல் வேண்டும்.

*அடகு வைப்பதற்கு பொருளை முன் வைப்பவர்கள் தன்னைப் பற்றிய உரிய விபரங்களை முன்வைக்கும் போது எடுக்க வேண்டிய செயற்பாடுகள்.*

36. எவரொருவரும்,

(அ) அடகு வைப்பதற்காக ஒரு பொருளை அடகு பிடிப்பவரிடம் முன் வைக்கும் எவரும் ஆனாலும் அடகு வைப்பவர் தனக்கு அப்பொருள் கிடைக்கப்பெற்றது எவ்வாறு என்பதைப் பற்றிய திருப்திகரமான விபரம் ஒன்றை அளிக்க நிராகரிக்கும் போது அல்லது அவ்வாறான விபரமொன்றை அளிக்க முடியாது இருக்கும் போதும் அவ்வாறின்றேல்,

(ஆ) அடகு வைப்பதற்காகப் பொருட்கள் அடகு பிடிப்பவர் முன் வைக்கும் போது பொருள் தனக்குரித்தானதெனில் அவரது பெயர், விலாசம் பற்றியும் அல்லது வேறொருவருடையதாயின், அவ்வுரித்தாளரின் பெயர், விலாசம் பற்றியும் வேண்டுமென்றே பொய்யான தகவல்களைக் கொடுத்திருப்பின் அவ்வாறின்றேல்,

(இ) மீட்டுவதற்கான உரித்தற்ற பொருளொன்றை மீட்டுவதற்கு முயற்சி செய்யும், அவ்வாறின்றேல்,

(ஈ) ஏதாவது ஒரு பொருள் அடகு வைப்பதற்காக அடகு பிடிப்பவரிடம் முன்வைத்த போது அப்பொருள் களவாடப்பட்டது அல்லது வேறு விதங்களில் சட்ட விரோமாக பெறப்பட்டது ஒன்று என சந்தேகித்த அடகு பிடிப்பவர்களுக்கு இருக்கின்றதெனினும், அப்போது அப்பொருளை அடகு பிடிப்பவரால் கூடிய கதியில் பொலிஸ் உத்தியோகத்தருக்கோ அல்லது சமாதான உத்தியோகத்தருக்கோ அறிவித்தல் வேண்டும். அவர் அப்பொருள் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கான பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது சமாதான உத்தியோகத்தர் பொலிஸ் பொறுப்பதிகாரி மூலம் உரிய நீதி அதிகாரமுடைய நீதிமன்றத்திக்கு உடனடியாக ஆஜராக்கல் வேண்டும்.

*அடகு பிடிப்பவரின் புத்தகம் பரிசீலனைக்கு உட்படுத்தக் கூடியதாகும்.*

37. ஓர் அடகு பிடிப்பவர் ஒருவருக்கு விடப்படும் உத்தரவொன்றின் பேரில் மாகாண வருமான ஆணையாளரால் அவ்வுத்தரவில் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிட்டுள்ள தினத்தன்று குறித்த நேரத்திற்கு நீதிவான் முன்னிலையில் ஆஜராகும் படியும் அப்பொருள்களை அடகு பிடிக்கும் வியாபாரத்திற்குரிய புத்தகங்கள், ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலனைக்காக முன்வைக்கும் படியும் அடகு பிடிப்பவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவது சட்டபூர்வமானதாகும்.

*பொருள்கள் அடகு எடுப்பவரின் கடைகள், வாசஸ்தளங்கள் பரிசீலனைக்குட் படுத்துவதற்குரிய அதிகாரம்.*

38. உப பொலிஸ் பரிசோதகரின் உத்தியோகத்திற்குக் கீழாகாத உத்தியோகத் தரத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரோ அல்லது பிரதான செயலாளரால் எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரால் ஓர் அடகு பிடிப்பவருடைய வியாபாரத் தளத்தை அல்லது வாசஸ் தளத்தைப் பகற் காலங்களில் அடகுக்குட்பட்ட பொருட்களை அல்லது நடைமுறைப்படுத்தும் புத்தகங்களை, ஆவணங்களைப் பரிசீலனை செய்யப்பட்டுத் தேவையான குறிப்புக்களைப் பெற்றுக் கொள்வது சட்டபூர்வமானதாகும். அவ்வாறான உத்தியோகத்தர்களால் அக்கருமத்தைச் செய்வதற்கு எவராலும் இடைஞ்சல்கள் ஏற்படுத்தல் கூடாது.

### 4 ஆவது பகுதி

### குற்றங்களும் தண்டனைகளும்

*அடகு வைப்பவர்களும் ஏனையவர்களும் செய்யும் குற்றங்கள்.*

39.(அ) அடகு வைப்பதற்கான ஏதாவது ஒரு பொருளை அடகு பிடிப்பவர் முன்வைக்கும் எனினும் அது தனக்குரித்தானது எவ்வாறு என்பதனைத் திருப்திகாணும் வகையில் விபரிக்க நிராகரிக்கும் அல்லது முடியாமற் போகும், அல்லது

(ஆ) அடகு வைப்பதற்காக பொருள் அடகு பிடிப்பவர் முன்வைக்கும் பொருளொன்று தனக்குச் சொந்தமான ஆதனமா இல்லையா என்பது சம்பந்தமாக அல்லது தமது பெயர் மற்றும் விலாசம் சம்பந்தமாக வேண்டுமென்றே பிழையான தகவல்களை அப்பொருளை அடகு பிடிப்பவரிடம் கொடுக்கும் அல்லது

(இ) ஏதாவது பொருளை விடுவிக்க (மீட்க) உரித்துடையவரல்லாது அப்பொருளை மீட்க முயற்சி செய்யும் பிரயாசைப்படும் அல்லது

(ஈ) வேறொருவரின் ஆதனமொன்றைச் சட்டரீதியான சான்றுகளின்றி பொருள் அடகு பிடிப்பவருக்கு அடகு வைக்கும் அல்லது

(உ) தன்னைப்பற்றி அல்லது வேறொருவரைப் பற்றி நிரூபிக்க அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவது ஒருவெளிப்பாடொன்று உள்ளடங்கி முக்கியமான விடயம் சம்பந்தமாகப் பொய் என்பதனை தெரிந்து கொண்டே பிரகடனப்படுத்தும் அல்லது,

(ஊ) இந்நியதிச் சட்டத்தின் ஏதாவதொரு ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது செய்யவேண்டுமென உத்தரவிடப்பட்டதை செய்யத் தவறுகின்ற

அனைவரும் குற்றத்திற்கு குற்றவாளியாகுகின்றனர்.

40. (அ)பதினெட்டு வருடங்களுக்குட்பட்டவர்களிடமிருந்து அல்லது குடிபோதையில் இருப்பரிடமிருந்து ஒரு பொருளை அடகு பிடித்தல். பொருட்களை அடகு எடுப்பவர் செய்யும் குற்றங்கள்.

(ஆ) அடகுச் சீட்டின் முதற் பிரதியை அடகு வைப்பவருக்கு ஒப்படைக்காமல் பொருளை அடகு பிடித்தல் அல்லது

(இ) வேறொரு பொருள் அடகு பிடித்தவரால் விநியோகஞ் செய்யப்பட்ட மூலப் பிரதி ஒன்றை விலைக்கு வாங்கும் அல்லது அடகு பிடிக்கும் அல்லது பண்டமாற்றஞ் செய்யும்.

(ஈ) 18 வயத்திற்குக் குறைந்த ஒருவரை அடகு வைப்பதற்காகச் சேவையில் ஈடுபடுத்துதல்.

(உ) தன்னிடத்தில் அடகு வைக்கப்பட்டிருக்கும் அடகுப் பொருளை இந்நியதிச் சட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்ற பகிரங்க ஏல விற்பனையில் கொள்விலைக்கே வாங்குதல்.

(ஊ) தன்னிடத்தில் அடகு வைக்கப்பட்டிருக்கும் அடகுப் பொருளை தனக்கே விலைக்கு வாங்கிக் கொள்ளும் போக்கில் விடுவிக்க வழி செய்கின்ற,

(எ) தன்னிடத்தில் அடகு வைக்கும் அல்லது அடகு வைக்க முன்வைக்கப்பட்ட ஒரு பொருளை அதை விடுவித்துக் கொள்ளும் (மீட்டும்) காலத்திற்குள் வாங்குவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது வெளியகற்றுவதற்கு அப்பொருளை அடகு வைக்கின்ற அல்லது அடகு வைக்க முன்வைக்கின்ற நபருடன் இணங்குகின்ற அல்லது,

(ஏ) தன்னிடத்தில் அடகு வைக்கின்ற அல்லது அடகு வைக்க, முன் வைக்கின்ற ஒரு பொருளை அதனை விடுவிக்க (மீட்க) கொடுக்கப்பட்டுள்ள, கால எல்லைக்குள் வாங்குவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது வெளியகற்றுவதற்கு வேறொருவருடன் இணக்கப்பாட்டுக்கு வருதல்.

(ஐ) தன்னிடத்தில் அடகு வைக்கப்பட்டுள்ள ஒரு பாண்டம் இந்நியதிச் சட்டத்தின் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பிரகாரமன்றி விற்பனை செய்யும் அல்லது வேறு விதமாக வெளியேற்றஞ் செய்யும் அல்லது,

(ஒ) இந்நியதிச் சட்டத்திற்கு அமையவுள்ள ஒரு புத்தகத்தில் பொய்யான குறிப்புகளைப் பதிக்கின்ற அல்லது அமைவாகவுள்ள குறிப்பொன்றை உட்படுத்தப்படாதிருக்கின்ற அல்லது,

(ஓ) தன்னிடத்தில் அடகு வைக்கப்பட்டுள்ள அனைத்து பாண்டங்களினதும் முழுமையான பெறுமதிக்குரியவாறு தனது வியாபாரத்தை காப்புறுதி செய்யாதிருக்கும் அல்லது,

(ஔ) எந்தவொரு ஏற்பாடுகளையும் மீறுகின்ற அல்லது செய்ய வேண்டுமென இந்நியதிச் சட்டத்தால் தமக்கு கட்டளை பிறப்பித்துள்ள ஏதாவதொன்றைச் செய்யாதிருத்தல், அல்லது,

(ஃ) பிரதான செயலாளரிடமிருந்து உரிய முறையிலான அனுமதிப்பத்திரமொன்றைப் பெறாது அடகு பிடிக்கும் வியாபாரமொன்றை நடாத்துகின்ற,

அனைத்து அடகு பிடிப்பவர்களும் குற்றத்திற்கு குற்றவாளியாகின்றனர்.

*பிடவைகள், ஆடைகள் முடிவுறாத பொருட்கள் என்பன அடகு பிடித்தல் தடை.*

**41.** பிடவைகள், ஆடைகள் மற்றும் முற்றுப்பெறாத பாண்டங்கள் அல்லது பொருட்கள் எவையும் அடகு பிடிக்கும் அனைத்து அடகு பிடிப்பவர்களும் குற்றத்திற்கு குற்றவாளியாகின்றனர். ஒரு நீதிமன்றத்தினால் எந்தவொரு அடகு பிடிப்பவரும் இப்பிரிவின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படும் போது அக்குற்றத்திற்காக அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய வேறு ஏதாவது தண்டனைக்கு மேலதிகமாக அப்பாண்டத்தை நீதிமன்றத்தில் அல்லது நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்படும் வேறொரு விதத்திற்கு அல்லது அதன் உரித்தாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

*அடகு வைத்தவர் ஒருவருடைய வரவிற்குள்ள பணத்தை மாகாண சபையில் அடகு எடுப்பவரால் வைப்புச் செய்யாத விடத்து.*

**42.** அடகு வைத்த பொருளின் வரவில் உள்ள பணத்தை 31 ஆவதுபிரிவின் படி அல்லது 32 ஆவது பிரிவின்படி உள்ளவாறு மாகாண சபையின் திரட்டு நிதிக்கு வைப்புச் செய்யாத அனைத்து அடகு பிடிப்பவர்களுக்கும் நீதி மன்றத்தினால் அக்குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படின் அக்குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய ஏனையதொரு தண்டனைக்கு மேலதிகமாக அத்தொகைக்குச் சமனான பணத்தொகை ஒன்று தெண்டம் அறவிடும் பிரகாரம் அடகு பிடிப்பவரிடமிருந்து அறவிடுவதற்கு அந்நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டதும் அப்பணத்தை அடகு வைத்தவரின் வரவிற்காக மாகாண சபை திரட்டு நிதியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

*பொருள் அடகு பிடிப்பவர் ஒருவரின் ஊழியர்கள் அல்லது பிரதிநிதிகள் செய்யும் குற்றம்.*

**43.** அடகு பிடிப்பவர் ஒருவர் வியாபாரத்தை நடாத்தும் போது செயற்பாடுகள் அவ்வடகு பிடிப்பவரின் ஊழியரால் அல்லது பிரதிநிதியால் செய்யப்படுகின்ற அல்லது உதாசீனமாகச் செய்யாது விடுகின்ற அல்லது ஏதாவது செயற்பாட்டைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அடகு பிடிப்பவரால் செய்யப்படுகின்ற அல்லது செய்யாது விடுகின்ற ஒன்றாகக் கருதப்படல் வேண்டும்.

அவ்வாறாயினும் பொருடக்ளை அடகு பிடிப்பவர் வியாபாரத் தளத்தில் இல்லாத போது அவ்வடகு பிடிப்பவரின் ஊழியரால் அல்லது பிரதிநிதியால் அந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற விதத்தில் ஏதாவது ஒரு செயல் செய்யப்படின் அல்லது செய்யாது விடின், அவ்வூழியர் அல்லது அப்பிரதிநிதி குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன் அக்குற்றத்திற்காக இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு அவர் ஆளாகின்றார்.

*தண்டனைகள்.*

**44.** (1) இந்நியதிச்ச ட்டத்தின் கீழ் குற்றம் புரிகின்ற அனைவரும் இருபத்தையாயிரம் (25,000) ரூபாவுக்கு கூடாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் கூடாத சிறைவாசத்திற்கு அல்லது அபராதம் சிறைவாசம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) (1) உப பிரிவின் கீழ் அறவிடப்படும் தண்டம் மாகாண சபை திரட்டு நிதியில் வரவு வைத்தல் வேண்டும்.

*பொருட்கள் அடகு பிடிப்பவரின் அனுமதிப் பத்திரத்தை செல்லுபடியற்றதாக்குதல்.*

**45.** பொருட்களை அடகு பிடிப்பவர் அல்லதுஅவர் இல்லாத சந்தர்ப்பத்தில் அவரது ஊழியர் அல்லது பிரதிநிதி, இந்நியதிச் சட்டத்தின் கீழ் அவரது வியாபாரம் செய்யப்பட்ட ஏதாவது ஒரு குற்றம் சம்பந்தமாக அல்லது களவாடப்பட்ட பொருள்என அறிந்து கொண்டே களவாடிய பொருள் சம்பந்தமாக குற்றவாளியாக்கப்படின், பிரதான செயலாளரால் அவ்வடகு பிடிப்பவரின் அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படல் வேண்டும்.

*அடகு எடுப்பவரிடம் சட்ட விரோதமாக வைத்திருக்கும் பொருள்கள்.*

**46.** (1) ஏதாவது பொருள் ஒன்று அடகு பிடிப்பவரினால் சட்ட விரோதமாக வைக்கப்பட்டிருப்பதாக இந்நியதிச் சட்டத்தின் கீழ் தொடரப்படுகின்ற வழக்கொன்றில் நீதிமன்றத்திற்கு காட்டிக் கொடுக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பொருளை நீதிமன்றத்தின் முன் வைக்கப்படினும் ஏற்புடையதான நீதிமன்றத்தினால் கருதப்படும் உத்தரவின் கீழ் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் வேண்டும்.

*வருடாந்தக் கணக்கு அறிக்கை.*

**47.** அனைத்து பொருட்கள் அடகு பிடிப்பவர்களாலும் தமது வியாபாரங்கள் பற்றிய வருடாந்தக் கணக்கு அறிக்கையொன்றை பிரதான செயலாளர் இடத்திற்கு முன்வைத்தல் வேண்டும்.

## 5 ஆவது பகுதி

## குறைநிரப்பு ஏற்பாடுகள்

*அடகு வைத்தவரின் வரவிற்கு மாகாண சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணம்.*

**48.** 31 ஆவது பிரிவினதும் 32 ஆவது பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய ஏதாவதொரு பணத்தொகை அடகு வைப்பவர் ஒருவரின் வரவிற்கு வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பபதில் அது பற்றி அடகு வைப்பவருக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு வைப்பில் வரவு வைக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அப்பணத்தை பிரதான செயலாளரிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ள அடகு வைத்தவருக்கு உரிமையுண்டு. இன்னும் ஒரு வருட காலத்திற்கும் அவ்வாறு கேட்டுப் பெற்றுக் கொள்ளாதவிடத்து அப்பணம் மாகாண சபை திரட்டு நிதிக்கு வரவு வைக்கப்படும்.

*பொருட்கள் அடகு எடுப்பவரின் பிரதிநிதிகளும் ஊழியர்களும்.*

**49.** அடகு பிடிப்பவரால் செய்யப்படல் வேண்டுமென இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது இந்நியதிச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள எச்செயல்களும் ஊழியராலும் பிரதிநிதியாலும் செய்ய முடியும்.

50. ஏதாவது பொருள் ஒன்று நிபந்தனை ஒன்றின் பேரில் பின்னர் மீட்டிக் கொண்டதாக அல்லது பணம் கொடுத்து வாங்கிக் கொள்வதாக உறுதியுடைய ஓர் இணக்கப்பாட்டின் பேரில் அல்லது ஏற்றுக் கொள்ளல் அல்லது கொடுக்கல் வாங்கல் அடிப்படையிலான இணக்கப்பாடொன்று அல்லது சம்மதித்தல் உள்ளதாகக் கருதும் போது அப்பொருளை வாங்குவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு கொடுக்கப்படும் முற்பணத்திற்குப் பிணையாக பொருளை வாங்கி அல்லது பொறுப்பேற்று அல்லது வைத்துக் கொண்டு அதன் அடிப்படையில் பணம் செலுத்தும் அல்லது முற்பணமாகக் கொடுக்கும் அல்லது கடனாகக் கொடுக்கும் அனைவரும் அடகு பிடிக்கும் வியாபாரத்தைச் செய்யும் ஒருவராக இந்நியதிச் சட்டத்தின் கருமங்களாகக் கருதப்படல் வேண்டும். இன்னும் அக்கொடுக்கல் வாங்கல்கள், பொருள்கள், செலுத்தல்கள், முற்பணங்கள் மற்றும் கடன் எனக் கருதப்படல் வேண்டும். சில வியாபாரிகள் அடகு எடுப்பவர் களாகக் கருதப்பட முடியும்.

51. (1) உத்தரவுகளை ஆக்கஞ் செய்வதற்கு இந்நியதிச் சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்தத் தேவையான விடயங்கள் சம்பந்தமான உத்தரவுகள் அமைச்சர் அவர்களால் அவ்வப்போது ஆக்கஞ் செய்ய முடியும். உத்தரவுகள்.

(2) விசேடமாக மற்றும் (1) வது உப பிரிவினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வியாபாரத்திற்குப் பாதகமின்றி,

(அ) உத்தரவிடவேண்டுமென இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமொன்றை உத்தரவிட்டும்,

(ஆ) அடகு பிடிப்பவர்களால் பிணை வைக்கப்படுவதற்கு நேர் எதிர் விளைவுடைய ஏதாவது விடயம் ஒன்றுக்கு ஏற்பாடுகள் செய்தும்,

அமைச்சர் அவர்களால் உத்தரவுகள் ஆக்கஞ் செய்ய முடியும்.

(3) இப்பிரிவின் கீழ் அமைச்சர் அவர்களால் ஆக்கஞ் செய்யப்படும் அனைத்து உத்தரவுகளும் வர்த்தமானப் பத்திரிகையில் (கசெற்றில்) பிரிசுரிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அவ்வுத்தரவில் செயற்படுவதற்காக குறித்த திகதியிலிருந்து உத்தரவுகள் நடைமுறையாகின்றன.

(4) இப்பிரிவின் கீழ் ஆக்கஞ் செய்யப்பட்ட அனைத்து உத்தரவுகளும் வர்த்தமானப் பத்திரிகையில் (கசெற்றில்) பிரசுரிக்கப்பட்டதன் பின்னர், அதிவிரைவில் மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக மாகாண சபை முன்வைத்தல் வேண்டும். அவ்வாறு முன்வைத்து அங்கீகாரம் பெறாத ஏதாவது உத்தரவு அவ்அங்கீகாரத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டியதெனினும் அவ்வுத்தரவின் கீழ் அதற்கு முன்னர் செய்யப்பட்ட எவற்றிற்கும் பாதகம் ஏற்படுவதில்லை.

(5) எந்தவொரு உத்தரவும் அவ்வாறு விடுவிக்கப்படின் எத்தினத்திலிருந்து செய்யப்பட்டதென வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின்) மூலம் அறிவித்தல் வேண்டும்.

52. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள், கருமங்கள், செயற்பாடுகள், எதனையும் பிரதான செயலாளரின் கையொப்பத்தின் கீழ் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அரச உத்தியோகத்தரால் நடைமுறைப் படுத்தல், செயற்படுத்தல் முடியும். இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களை ஒப்படைத்தல்.

53. இந்நியதிச் சட்டத்தில் பாதகமாக எவைகள் குறிப்பிடப்பட்டிருப்பினும், இடைக்கால ஏற்பாடுகள்.

(அ) (99 ஆம் அதிகாரமாகிய) அடகு ஆணைச் சட்டத்தின் கீழ் தென் மாகாணத்துனுள் விநியோகிக்கப்பட்டுள்ள ஓர் அனுமதிப்பத்திரம் இந்நியதிச் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் எனக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) அவ்வாணைச் சட்டத்தில் ஆக்கப்பட்ட உத்தரவுகள் எதனையும் அகற்றி இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட உத்தரவுகள் அதற்குப் பதிலாக்கப்படும் வரை அவ்வுத்தரவுகள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட உத்தரவுகள் எனக் கருதப்படல் வேண்டும்.

(இ) ஆணைச் சட்டத்தின் கீழ் தாக்கஞ் செய்யப்பட்டு குறித்த தினத்திற்கு முன்னரான திகதியாகும் போது விசாரணைக்கு பாத்திரமாகிய ஒரு வழக்கு மற்றும் அவ்வாறான வழக்கொன்றில் நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட ஒரு தீர்ப்பு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இந்நியதிச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு ஒன்று எனவும், இந்நியதிச் சட்டத்தின் கீழ் தொடரப்படட் வழக்கு ஒன்றின்போது அளிக்கப்பட்ட தீர்ப்பு எனவும் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல். 54. சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள்கள் தேவைப்பட்டாலன்றி இந்நியதிச் சட்டத்தில்:-

"குறித்த திகதி" என்பது இந்நியதிச் சட்டம் அதிகாரமுடையதாகும் திகதியாகும்.

"வியாபாரத்தளம்" என்பது வதிவிடம் அல்லது சுரங்கம், அல்லது வியாபாரக் கருமபீடம் அல்லது ஓரிடம்.

"பிரதான செயலாளர்" என்பது தென் மாகாண மாகாண சபையின் பிரதான செயலாளர் அல்லது அவரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது உத்தியோகத்தர்கள்.

"ஆளுநர்" என்பது தென் மாகாண ஆளுநராவார்.

"வெளிநாட்டுக் கம்பனிகள்" என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XL வது பகுதிக்கு ஏற்புடையதான கம்பனி ஒன்று.

"வெளிநாட்டு வியாபார நிறுவனம்" என்பது :-

(அ) பங்காளர்கள் இருவர் அடங்கிய வியாபாரமாயின், அதன் ஒரு பங்காளர் அல்லது இருவரும் இலங்கைப் பிரஜை அல்லாதவர்களின் வியாபாரம்.

(ஆ) பங்காளர்கள் இருவருக்குக் கூடுதலாக அடங்கிய வியாபாரம் ஒன்றாயின் அவர் குறைந்த பட்சம் அவர்களின் ஒருவராவது இலங்கைப் பிரசையல்லாத வியாபார நிறுவனம்.

எனக் கருதப்படும்.

"மாதம்" என்பது இலாபம் அல்லது வட்டி அறவிடல் சம்பந்தமாக 30 நாட்கள் கொண்ட காலம்.

"பொருள் அடகு பிடிப்பவர்" என்பது பொருட்கள் அடகுக்கு எடுக்கும் வியாபாரத்தை நடாத்தும் அனைவரும் உட்படுவர்.

"அடகு எடுப்பவர்" என்பது அடகு எடுப்பதற்காக ஒரு பொருளை அடகு எடுக்கும் வியாபாரத்தை நடாத்துகின்ற ஆனாலும் அவ்வியாபாரத்தைச் செய்யும் வங்கியொன்று அல்லாத அனைவரும் உட்படுகின்றனர்.

"அமைச்சர்" என்பது தென் மாகாண சபையின் நிதிக்குப் பொறுப்பான அமைச்சராவார்.

"மாகாண சபை" என்பது தென் மாகாணத்தின் மாகாண சபையாகும்.

"மாகாண சபைத் திரட்டு நிதி" என்பது 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட தென் மாகாண சபைத் திரட்டு நிதி எனப்படும்.

"முடிவுறாத பொருட்கள் பாண்டம்" என்பது பாண்டங்கள் அல்லது பொருட்கள் எதுவாகினும் ஒரு உற்பத்திக்கு ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் அல்லது பாண்டம் அல்லது பொருட்கள் விடயத்தில் அவற்றைப் பாவித்து ஓர் உற்பத்திக்கான செயற்பாட்டுக்கு ஈடுபடுத்தியதன் பின்னர் அல்லது நுகர்விற்காக முடிவுறச் செய்ய அப்பாண்டங்கள் அல்லது பொருட்கள் கலவையில் அல்லது உற்பத்தி நிலையில் இருப்பினும் அல்லது ஒரு பகுதி உற்பத்தியாகி இருப்பினும் அவ்வாறான பாண்டங்கள் எதுவாயினும் பாண்டங்கள் செய்தல் அல்லது உற்பத்தியாளர்களுக்காக தேவைப்படும் பொருட்கள் எதுவும் உள்ளடங்கும்.

(3 வது பிரிவு)

## முதலாவது அட்டவணை

### அனுமதிப்பத்திரம்

தென் மாகாண பிரதம செயலாளராகிய .... ஆகிய நான் தென் மாகாண சபை எல்லைக்குள் ................ என்ற இடத்தில் பொருட்கள் அடகு எடுப்பவரின் வியாபாரத்தை நடாத்துவதற்கு .............. வசிக்கும் ................ க்கு, தென் மாகாண சபையின் இல. ........ உடைய பொருட்கள்அடகு பிடிப்பவர்களின் (எடுப்பவர்) நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அதிகாரமளித்து அனுமதிப்பத்திரம் வழங்குகின்றேன்.

இவ்வனுமதிப்பத்திரம் ............. ஆந் திகதியுடன் முடிவடைகின்றது.

..........................................
பிரதம செயலாளர்.

(17 ஆவது பிரிவு)

## இரண்டாவது அட்டவணை

'அ' படிவம்

### அடகுப் பொருட்கள் ஏடு (புத்தகம்)

............ பொருட்கள் அடகு எடுப்பவரான ............ உடைய அடகுப் பொருட்கள் ஏடு (புத்தகம்)

| அடகுச் சீட்டின் இலக்கமும் விநியோகித்த திகதியும் | மாதத்தின் அடகுப் பொருளின் இல. | ஒவ்வொரு பொருளுக்குமாகக் கொடுக்கப்பட்ட கடன் தொகை | ஒவ்வொரு பொருளுக்குமாக அறவிடப்பட்ட இலாபம் அல்லது வட்டி | அடகு வைப்பவரின் பெயர் | அடகு வைப்பவரின் விலாசம் | அடகு பிடிப்பவர் உரித்தாளர் அல்லாதவிடத்து, உரித்தாளரின் பெயர் | அடகு வைத்த ஒவ்வொரு பொருளினதும் விபரம் | அடகு வைத்த பொருள் தங்க ஆபரணமாயின் அதன் பாரம் | அடகு வைத்த ஒவ்வொரு பொருளினதும் பெறுமதி | மீட்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. | | | | | | ரூ. ச. | |

(17 ஆவது பிரிவு)

"ஆ" படிவம்

### அடகுப் பொருட்கள் விற்பனை ஏடு (புத்தகம்)

விற்பனை செய்த திகதியும் இடமும் : .................................

ஏலவிற்பனையாளரின் பெயரும் விலாசமும் : ...................................

| அடகுப் பொருட்கள் புத்தகத்திலுள்ள வாறு அடகுப் பொருளின் இல. | அடகு வைத்த திகதி | அடகு வைத்த பெயர் | கடன் தொகை | அறவிட வேண்டிய வட்டித்தொகை | ஏலவிற்பனையாளரால் ஒவ்வொரு அடகுப் பொருளும் விற்பனை செய்யப்பட்ட தொகை (பணம்) | வாங்கியவரின் பெயரும் விலாசமும் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | |

*(18 ஆவது பிரிவு)*

*"இ" படிவம்*

**அடகுச் சீட்டு**

| | |
|---|---|
| இணைப் பிரதி, இல. ....... பொருட்கள்<br>அடகு பிடிப்பவர் வைத்துக் கொள்ள வேண்டியது.<br><br>திகதி : ...................<br>பொருட்கள் அடகு வைப்பவரின் பெயரும் விலாசமும்:<br><br>................ இல. ............... கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு உடைய கீழே கையொப்பமிடும் (அடகு எடுப்பவரின் விலாசம்) .............. வசிக்கும்........... ஆகிய நான் மேற்கண்ட பொருளை அடகு பிடிப்பவருக்கு ரூபா ............. பெறுமதியடைய ................. ரூபா .............. க்கு இன்றைய தினம் அடகு வைத்தேன்.<br><br>அடகு வைத்தவரின் கையொப்பம் அல்லது<br>பெயர் :<br>எழுத முடியாவிடில் அவரது இடது<br>பெருவிரல் அடையாளம் | மூலப் பிரதியின் இல. ........<br>திகதி : ...................<br><br>........................<br>(அடகு வைப்பவரின் பெயரும் விலாசமும்)<br>ஆகிய என்னால், இதில் கீழ் கையொப்பமிடும் ................ பொருள் அடகு எடுப்பவரின் பெயரும் விலாசமும்)<br>க்கு ரூபா ................ பெறுமதி உடைய ..... ரூபா ..................... க்கு இன்றைய தினம் அடகு வைக்கப்பட்டது.<br><br>பொருட்கள் அடகு எடுப்பவரின்<br>பெயர் :<br>அல்லது அவரது ஊழியரினது அல்லது<br>பிரதிநிதியினது கையொப்பம்: |

*(22 ஆவது பிரிவு)*

*"ஈ" படிவம்*

**அடகு வைப்பவரின் கையொப்பத்துடன் கையளிக்கச் செய்யும் கையொப்பமிடப்படாத அடகுச் சீட்டொன்றின் முதற் பிரதியை 22 ஆவது பிரவின் கீழ் ஒப்படைக்கப்படும்போது செய்ய வேண்டிய பிரகடனம்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள்/பொருள் .......................... என்னால் அடகு எடுப்பவராகிய .......................... உடைய வியாபாரத் தளத்தில் அடகு வைக்கப்படடதெனவும் அதற்காகவுள்ள அடகுச் சீட்டின் மூலப் பிரதியை பெற்றுக் கொண்டுள்ளேன் என்றும் குறித்த .............. (அடகு வைப்பவர்) மரணமடைந்துள்ளதால் ............................. காரணமாக ஏற்பட்டுள்ள சட்ட ரீதியான சட்டப் பிரச்சினையின் கீழ் இருப்பதினால் அவ்வடகுப் பொருளை மீட்டியெடுப்பதற்காக குறித்த .................. (அடகு வைத்தவரின்) கையொப்பத்துடன் அவ்வடகுச் சீட்டின் மூலப் பிரதி கையளிக்கும் கையொப்பத்துடன் முன் வைக்க முடியாதெனவும் ................ ஆம் இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு உடைய ............. இல் வசிக்கும் .......................... ஆகிய நான், அடகு எடுப்பவர்களின் நியதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் சத்தியப் பிரகடனம் செய்கின்றேன்.

மேற்கண்ட பொருட்கள்/பொருள் ...................... ஆகும்.

மேற்கண் பிரகடனத்தை (சத்தியத்தை) செய்யும் ............. இல் வசிக்கும் .............. பெயருடைய நபராவார் என்பதை நான் அறிவேன் எனவும் ............ ஆகிய நான் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய உறுதியுடன் நம்பிக்கையுடனும் இத்தால் சத்தியம் செய்கின்றேன்.

20..... ஆம் ஆண்டு ........... மாதம் .............. ஆந் திகதி என் முன்னிலையில் பிரகடனப்படுத்தி கையொப்பமிடப்பட்டது.

("ஏ.பீ" உடைய) கையொப்பம் : .........................
("சீ.டீ" உடைய) கையொப்பம் : .........................

................................
சமாதான நீதவான்.

*(24 ஆவது பிரிவு)*

*"உ" படிவம்*

**அடகுச் சீட்டின் முதற் பிரதி காணாமற் போதல் போன்ற சந்தர்ப்பங்களில் செய்ய வேண்டிய சத்தியப் பிரகடனம்**

இச்சத்தியப் பிரகடனம் பொய் ஒன்று ஆயின் இப்பிரகடனத்தைச் செய்பவருக்கு தண்டனை அளிக்கப்படும்.

பொருட்களை அடகு எடுப்பவரான ............ உடைய வியாபாரத் தளத்தில் கீழ் விபரிக்கப்படும் பொருட்கள் ............. ஆல் அடகு வைக்கப்பட்டதென்றும் அதற்காக விநியோகிக்கப்பட்ட அடகுச் சீட்டின் முதற் பிரதி ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் அம்மூலப் பிரதி

அதன் பின்னர் ............. இடமிருந்து ............. என்னும் முதற் பிரதி ................ அல்லது நான்அறிந்த வகையிலும் என் தன்னம்பிக்கையின் பிரகாரமும் வேறொருவருக்கு விற்கவோ அல்லது உரித்தாக்கவோ இல்லையென்றும் .................... ஆம் இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை /கடவுச் சீட்டை உடையவரான ..................... இல் வசிக்கும் (ஏ. பீ) ..................... ஆகிய நான், அடகு எடுப்பவரின் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் சத்தியம் செய்கின்றேன்./உறுதியளிக்கின்றேன்.

மேற்குறித்த பொருள்/பொருட்கள் பற்றிய விபரம் பின்வருமாறு :

....................................................................................................................................................................................................
....................................................................................................................................................................................................

இதில் மேலே குறிப்பிட்ட பிரகடனத்தை செய்கின்ற நபரான ............................... இல் வசிக்கும் (ஏ, பீ) ................................. என்ற பெயருடைய நபர் என்பவரை நான் நன்கு அறிந்தவன் என்பதை (சீ. டீ) ..................... ஆகிய நான் குறித்த ஆணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பயபக்தியுடன் உண்மையாகவும் இத்தால் வெளிப்படுத்தி உறுதி செய்கின்றேன்.

20..... ஆம் ஆண்டு .......... மாதம் .............. ஆந் திகதி ......... என் முன்னிலையில் உறுதியளித்து கையொப்பமிடப்பட்டது.

("ஏ.பீ" உடைய) ஒப்பம் : .........................
("சீ.டீ" உடைய) ஒப்பம் : .........................

................................
சமாதான நீதவான்.

*(28 ஆவது பிரிவு)*

*"ஊ" படிவம்*

**பற்றுச் சீட்டு**

திகதி : ...................

இல.............................................................................. உடைய அடகுப் பொருட்கள் மீளளிக்கப்பட்டதினால் பெற்றுக் கொண்ட

| | | ரூ. ச. |
|---|---|---|
| கடன் தொகை | .................................. | ................................. |
| இலாபம் அல்லது வட்டி | .................................. | ................................. |
| விற்பனை வரி | .................................. | ................................. |
| | மொத்தம் | |

*(28 வது பிரிவு)*

***மூன்றாவது அட்டவணை***

**1. வட்டி அளவு :**

கடனாகக் கொடுக்கப்படுகின்ற ஒவ்வொரு ஆயிரம் ரூபாவிற்கும் வட்டிவீதம் ஒவ்வொரு மாதத்திற்கு அல்லது மாதத்தின் ஒரு பகுதிக்கு 8% வீதம்.

**2. உரிய வரி செலுத்துதல் :**

அடகுப் பொருள் ஒன்றின் பேரில் கொடுக்கப்படுகின்ற கடனுக்காக அடகுப் பொருள் எடுப்பவர் ஓர் எழுத்தினாலான சட்டத்தின் கீழான வரி ஒன்றைச் செலுத்த வேண்டியுள்ளதால் அவ்வரியை அடகு வைப்பவரிடமிருந்து அறவிட முடியும்.

**3. கூடுதலாக வட்டி அறவிடுதலை வரையறுத்தல் (கட்டுப்படுத்துதல்):**

ஏதாவது ஒரு தினத்திலிருந்து கூடுதலாக வட்டி அறவிட பொருள் அடகு எடுப்பவருக்கு முடியுமான சந்தர்ப்பத்தில் அத்தினத்திற்கு முன் தினத்தில் மு. ப. 8. 00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை அடகு ஈட்டுபவரின் வியாபாரத் தளம் மூடி இருந்ததன் காரணமாக அடகு வைத்தவருக்கு

அப்பொருளை மீட்டி எடுக்க முடியாமற் போனமை பற்றி நீதிமன்ற அதிகாரமுடைய சிவில் நீதிமன்றம் திருப்தியடையக் கூடிய விதத்தில் அடகு வைத்தவரால் நிரூபிக்க முடியுமாயின், அவ்வாறான கூடுதலான வட்டி ஒன்றை அறவிட அடகு எடுத்தவருக்கு முடியாது.

அவ்வடகுச் சீட்டுக்குரிய பொருளை அடகு வைக்கப்பட்ட திகதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குள் மீட்கப்படாவிடின், அவ்வடகுப் பொருளை பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய முடியும்.

அவ்வாறு விற்பனை செய்யும் போது உரிய தொகைக்குக் கூடியதொரு இலாபம் கிடைக்கப்பெறின், அந்த இலாபத்தை விற்பனைத் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் அடகு வைத்தவரால் கேட்டுப் பெற்றுக் கொள்ளாதவிடத்து, அக்கூடுதலாகப் பெற்ற இலாபத்தை அவ்வடகு வைத்தவரின் வரவிற்கு ஒரு வருட காலத்திற்கு மாகாண சபையால் வைப்புச் செய்தல் வேண்டும்.

(29 ஆவது பிரிவு)

**நான்காவது அட்டவணை**

**அடகுப் பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கான உத்தரவு**

1. ஏல விற்பனை செய்யப்படும் அனைத்து அடகுப் பொருட்களையும் பொது மக்களின் பார்வைக்காக ஏல விற்பனை செய்பவரால் திறக்கப்பட்ட நிலையில் வைத்தல் வேண்டும்.

2. அடகுப் பொருட்கள் சம்பந்தமாக கீழ்க் காணும் விடயங்கள் விபரங்களடங்கிய பெயர்ப் பட்டியல் ஒன்று ஏல விற்பனையாளரால் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும்:-

(அ) பொருட்கள் அடகு எடுப்பவரின் பெயரும் வியாபார தளமும்

(ஆ) அவ்வடகுப் பொருட்கள் அடகு வைக்கப்பட்ட திகதி

(இ) ஒவ்வொரு அடகுப்பொருளும் அடகு வைத்த சந்தர்ப்பத்தில் அடகுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்ட விதத்தில் ஒவ்வொரு அடகுப் பொருள் இல.

3. ஒவ்வொரு அடகு எடுப்பவரின் பொருட்கள் அப்பெயர்ப் பட்டியலில் வேறொரு பொருட்கள் அடகு எடுப்பவரின் அடகுப் பொருளிலிருந்து வேறாகக் காட்டப்படல் வேண்டும்.

4. விற்பனை பற்றிய அறிவித்தலை ஏல விற்பனையாளரால் குறைந்த பட்சம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பத்திரிகைகளில் (மூன்று பத்திரிகைளிலும்) பிரசுரிக்க வேண்டியதுடன், விற்பனை நடைபெறும் பிரதேசத்தில், மனித நடமாட்டமுடைய இடங்களில் அவ்வறிவித்தல்களைக் காட்சிப்படுத்துதல் வேண்டும். இன்னும் அவ்வறிவித்தல்களில் பின்வரும் விடயங்கள் உட்படுத்தப்படல் வேண்டும்.

(அ) பொருட்கள் அடகு எடுப்பவரின் பெயரும் வியாபார நிலையமும்

(ஆ) அவ்வடகுப் பொருள் அடகு வைக்கப்பட்ட மாதம்.

5. அவ்வறிவித்தல் ஒரே செய்திப் பத்திரிகையில் இரண்டு தினங்களுக்குப் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், இரண்டாம் நாள் பிரசுரிக்கப்படும் அறிவித்தலை விற்பனை செய்யும் முதல் நாளைக்கு குறைந்த அளவில் தெளிவாக பத்து நாட்களுக்கு முன்னர் பிரசுரித்தல் வேண்டும்.

6. விற்பனை ஒன்றின்போது அடகு எடுப்பவர் முத்திரை இடப்பட்ட கூறல் (Bids) வைக்கும் போது அவ்விற்பனையில் வேறொரு நபரால் வைக்கப்படுகின்ற கூறல்களை (Bids) விட வேறொரு விதத்தில் ஏல விற்பனையில் ஈடுபடுபவர் இக்கூறல் (Bids) பற்றி கவனத்தில் எடுக்காதிருத்தல் வேண்டும். இன்னும் ஒரு பொருள்/பொருட்கள் அடகு பிடிப்பவரால் விலை கொடுத்து வாங்கப்பட்ட போது அப்பொருளை விலை கொடுத்து வாங்கியவர் என அப்பொருட்களை அடகு வைத்தவரின் பெயரை விற்பனை செய்தவரால் உடனடியாக சப்தமிட்டு வெளிப்படுத்துதல் வேண்டும்.

7. இவ்விற்பனையின் பின்னர் 14 நாட்களுக்குள் அப்பெயர்ப் பட்டியலின் பிரதி ஒன்றை அல்லது பொருட்களை அடகு எடுப்பவரின் அடகுப் பொருட்களுக்கு உரியதான பெயர்ப் பட்டியலில் பகுதியின் பிரதி ஒன்றை அப்பொருள் அடகு எடுப்பவரின் அடகுப் பொருட்கள் விற்பனையின் மூலம் பெற்ற பணத்தொகையின் கணக்கையும் பதித்து ஏலவிற்பனை செய்தவரின் கையொப்பத்துடன் உறுதிப்படுத்தி அப்பொருள் அடகு வைத்தவருக்கு ஏல விற்பனை செய்பவரால் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

8. பொருட்கள் அடகு பிடிப்பவரினால் அந்த ஏலவிற்பனையின் பின்னர் குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் அவ்வாறான பெயர்ப் பட்டியலினைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

**கொபேகனே பிரதேச சபை**

அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடுதல்

*1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் சரத்தின் 01 ஆம் உப சரத்தின் மூலம் பிரதேச சபைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கொபேகனே பிரதேச சபையினால் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்ட (04) IV ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் மேற்கண்ட பிரேரணை குறிப்பிட்ட சட்டத்தின் மேற்குறிப்பிட்ட உப சரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வட மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் டப்ளிவ். எம்.எம்.பீ.வீரசேகர ஆகிய என்னால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

டப்ளிவ்.எம்.எம். பீ. வீரசேகர,
உள்ளூராட்சி ஆணையாளர்
உள்ளூராட்சி திணைக்களம்,
குருநாகல்.

உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம்,
2013.04.23.

**பிரேரணை**

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 134ஆம் சரத்தின் 01 ஆம் உப சரத்தின் மூலம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கொபேகனே பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும்,*

02. குறிப்பிட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை நியமத்திற்கு வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும், கொபேகனெ பிரதேச சபை பிரேரிக்கின்றது.

**அட்டவணை**

கொபேகனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள 1921 ஆம் இலக்க பன்னவ கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்டதும்
வடக்கு : 9118 ஆம் உறுதியின் பிரகாரம் திரு.எம்.எம். எம். சுஹைப் அவர்களினது 77773 ஆம் இலக்க உறுதியின் பிரகாரம் திரு. ஏ.எம்.எம்.காசிம் ஆகியோர்களினதும் ஆதனங்களையும்;
கிழக்கு : மத்திய கோட்டிலிருந்து 100 மீற்றர் எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனங்களையும்;
தெற்கு : பன்னவ சிங்களப் பாடசாலையும் மற்றும் 34048 ஆம் உறுதியின் பிரகாரம் திரு. ஏ.டபிள்யு. நஸார் என்பவரது ஆதனங்களையும் ;
மேற்கு : மத்திய கோட்டிலிருந்து 100 மீற்றர் எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து ஆதனங்களையும் எல்லையாகக் கொண்ட பிரதேசம்.

**கொபேகனே பிரதேச சபை**

பன்னவ புதிய மதிப்பீட்டு வலயத்தை பெயரிடுதல்

பன்னவ புதிய வரி மதிப்பீட்டு வலயமாக பிரகடனப்படுத்தும்போது பன்னவ ரபுகன பாதையின் இரு புறங்களிலும் 1400 மீட்டர் அளவு பிரதேசம் வரி மதிப்பீட்டு வலயமாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வலயமானது திரு. எம். எல் எம். காசிம் அவர்களின் வீட்டின் (வலது பக்கம்) முதல் திரு. எம். ஐ. எம். சுஹைப் அவர்களின் வீட்டின் (இடது பக்கம்) முதல் ஆரம்பித்து பாதையின் இரு பக்கங்களிலும் சிங்கள பாடசாலை வரை உள்ள பிரதேசத்தின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் பத்திர இலக்கத்தையும், வரைபட இலக்கத்தையும் 2011.06.03 ஆந் திகதி அன்று பள்ளிவாசலுக்கு எடுத்துக் கொண்டு வரும்படி தயவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

| இல. | பெயர் | பத்திர இல. | வரைபட இல. |
|---|---|---|---|
| 1. | திரு. எம். ஐ. எம். ஜுனைட் | 9118 | 1644 |
| 2. | திரு. எம். எச். எம்.உவைஸ் | 18818 | 1644 |
| 3. | திரு. எஸ். எம். பாரிஸ் | 8291 | 1644 |
| 4. | திரு. ஏ. எச். எம். இப்ராஹிம் | குரு/பு 77773 | 1644 |
| 5. | திரு. ஏ. எம். எம். காசிம் | குரு/பு 77773 | 1644 |
| 6. | திரு. ஏ. சீ. எம். அமீன் | குரு/பு 77773 | 1644 |
| 7. | திரு. ஏ. எச். எம். ரசாக் | குரு/பு 77773 | 1644 |
| 8. | திரு. எம். சீ. எல்.கலீல் | குரு/பு77773 | 1644 |
| 9. | திரு. ஏ. ஐ. பிரிதவுஸ் | 45569B | 1644 |

| இல. | பெயர் | பத்திர இல. | வரைபட இல. |
|---|---|---|---|
| 10. | திரு. ஏ. ஐ. ஹர்ஸ் அஸ்ரத் | 45569A | 1644 |
| 11. | திரு. யு. எல். அலி இப்ராஹிம் | வசிப்பதில்லை | 1644 |
| 12. | திரு. யு. எல். எம். ரிஸ்வி | 7475 | 1644 |
| 13. | திரு. ஏ. எச். எம். உதுமா லெப்பை | 7475 | 1645 |
| 14. | திரு. ஏ. எல். இஸ்மி | 30987 | 1645 |
| 15. | திரு. ஏ. எச். எம். சாவுல் ஹமீட் | 2107 | 1645 |
| 16. | திரு. ஏ. சீ. எஸ் ஆப்தீன் | 144 | 1645 |
| 17. | திருமதி ஐ. சித்தி ஹம்சியா | 13220 | 1645 |
| 18. | திரு. ஐ. எல். தாஹிர் | | |
| 19. | திருமதி எம்.சி.ரிசானா | | |
| 20. | திரு. எம். சி. அபுல் ஜவ்வார் | | |
| 21. | திரு. செய்லாப்தீன் | | |
| 22. | திரு. நஜிப்தீன் (இரண்டு மாடி) | 25619 | 1645 |
| 23. | திருமதி எம். எல். மீரா லெப்பை | 25619 | 1645 |
| 24. | கூட்டுறவுக் கடை | அரச காணி | 1645 |
| 25. | பாலர் பாடசாலை | அரச காணி | 1645 |
| 26. | கூட்டுறவுக் களஞ்சியசாலை | அரச காணி | 1645 |
| 27. | சபை மண்டபம் | அரச காணி | 1645 |
| 28. | திருமதி ஏ. எம். அசீதா | 1334 | 1644 |
| 29. | திரு. ஏ. எஸ். ரசான்தீன் | 323 சொந்தமான | 1645 |
| 30. | திரு. இக்பால் | | |
| 31. | திரு. ஏ. ஆர். சபிஉல்லா | 1777 சொந்தமான | 1645 |
| 32. | திரு. ஏ. எல். சுவைஸ் | | |
| 33. | திரு. ரகுமான் | | |
| 34. | திரு. ஏ. சி. எம். அப்துல் காதர் | 2512 சொந்தமான | 1645 |
| 35. | திரு. இஸ்ஹாக் லெப்பே | 9182 சொந்தமான | 1645 |
| 36. | திரு. ஏ.சீ. எம். நசீர் | | |
| 37. | திரு. ஹனீபா | | |
| 38. | திரு. வை. எம். நிபாஹிர் | | |
| 39. | திரு. யூ. எல். ஹசீஸ் | | |
| 40. | திரு. யூ. எல். மசீர் | | |
| 41. | திரு. என். மொஹமட் | | |
| 42. | திரு. ஐ. எல். எம். மாஹிர் | | |
| 43. | திரு. எம். ஆர். ஈ. நாசர் | 577 | 1645 |
| 44. | திரு. எம். எச். ரிஸ்வான் | | |
| 45. | திரு. காதர் | | |
| 46. | திரு. ஹபீப் | 6465 | 1645 |
| 47. | திரு. இம்தியாஸ் | 6465 | 1645 |
| 48. | திரு. ஈ. ஏ. அசீம் | 6465 | 1645 |
| 49. | திரு. ஏ. சீ.எம். நசார்(ஒரு காணி) | 1850 சொந்தமான | 1645 |
| 50. | திரு.ஏ. சீ. எம். நசார்(ஒரு காணி) | 1850 சொந்தமான | 1645 |
| 51. | திரு. ஏ. சீ. எம். தஸ்லிம்(ஒரு காணி) | 1850 சொந்தமான | 1645 |
| 52. | திரு. பீ. அப்துல் காதர் | | |
| 53. | திரு. அர்சாத் | | |
| 54. | திரு. அபூர் | | |
| 55. | திரு. நிஜாப்தீன் | | |
| 56. | திருமதி உம்மு லதீபா | | |
| 57. | திரு. இஸ்மாயில் | | |
| 58. | திருமதி செஹரா உம்மா | | |
| 59. | திரு. ஏ. பி. அபூபக்கர் | | |
| 60. | திரு. நசீம் | | |
| 61. | திரு. ஹுசைன் | | |
| 62. | திரு. பாஹிம் | | |
| 63. | திரு. எம். எல். எம். காசீம் | பரம்பரை பன்னவ | 1644 |
| 64. | திரு. தஸ்லீம் | | |
| 65. | திரு. எம். சீ. எம். ஹனீபா | 10983 பன்னவ | 1644 |
| 66. | திரு. ஐயூப் | 951 | 1645 |

| இல. | பெயர் | பத்திர இல. | வரைபட இல. |
|---|---|---|---|
| 67. | திரு. எம். எஸ். எம். இஸ்மாயில் | 1196 | 9053 |
| 68. | திருமதி ஏ. எச். லெய்ஸா உம்மா | 993 | |
| 69. | திருமதி ஏ. எச். ஸரீபா | 13953 | 1644 |
| 70. | திரு. ஏ. ஏ. எம்.ராசிக் | 665 | 1764 |
| 71. | திரு. ஜே. எம். ஹாசீம் | 13952 | 1644 |
| 72. | திரு. திருமதி எஸ். எல். சஜீதா உம்மா | 992 | 1664 |
| 73. | திரு. எஸ். எல். அபூதாலிப் | 993 | 1644 |
| 74. | திரு.எஸ். எல். என். நெய்னா மொஹமட் | 994 | |
| 75. | திருமதி எஸ். எல். நஜீமா உம்மா | | |
| 76. | திரு. எம். எல் முத்தலிப் | | |
| 77. | திரு. ஏ. டபிள்யு. நசீர் | 34048 | 1645 |
| 78. | திரு. எம். ஐ. எம். ராசிக் | 34048 | 1645 |
| 79. | திரு. பீர் மொஹம்மது | | |
| 80. | திரு. பி. எம். எம். ஹாசீம் | | |
| 81. | திரு. ஏ. பீ. எம். சமீன் | | |
| 82. | திரு. ஹாசீம் | | |
| 83. | திரு. நௌபர் | | |
| 84. | திரு. சலீம் | | |
| 85. | திருமதி ஐ. எல். எம். மரியம் பீபி | 219 கழி | 1645 |
| 86. | திருமதி ஐ. எல். எம். ஆய்சா உம்மா | | |
| 87. | திரு. ஏ. எச். எம். உதுமா லெப்பை | 213 | 1645 |
| 88. | திரு. ஏ. எச். எம். காசிம் | 213 | 1645 |
| 89. | திரு. அப்துல் ரசாக் | | |
| 90. | திரு. முபாரக் | 216 | 1645 |
| 91. | திரு. எஸ். எம் . இஸ்மியான் | 216 | 1645 |
| 92. | திருமதி ஐ. எல். கதீஜா உம்மா | குரு/பு 80328 | 1644 |
| 93. | பள்ளிவாசலுக்கு சொந்தமான பங்கு | | |
| 94. | திரு. ஐ. எல். எம். ராசிக் | குரு /பு 25394 | 1442 |
| 95. | திரு. ஐ. எல். எம். மிஹ்லார் | குரு /பு 225395 | 1442 |
| 96. | திரு. ஐ. எல். எம். நிசார் | குரு / 123396 | 1442 |
| 97. | திரு. ஐ. எல். எம். தாஹிர் | குரு /பு 123397 | 1442 |
| 98. | திரு. இஷாக் லெப்பை | | |
| 99. | திரு. இஷாக் | | |
| 100. | திரு. ஏ. எச். எம். நியாஸ் | குரு/பு 21090 | 1645 |
| 101. | திரு. ஏ. பீ. நூஹூ | | |
| 102. | திரு. அப்துல் லத்தூர் | 3938 | 1645 |
| 103. | திரு. ஏ. எல். நிலார் | 1191 | 1645 |
| 104. | திரு. ஐ. ஐ. அகமது லெப்பை | 1191 | 1645 |
| 105. | திரு. ஐ. எல். தம்சீர் | 6702 | 1645 |
| 106. | திரு. ஏ. எச். அமீர் அக்பர் | 32702 | 1645 |
| 107. | திரு. ஐ. பீ. ஹார்தீன் | 4371 | 1645 |
| 108. | திரு. எம். எச். எம். நிஹாஸ் | 4371 | |
| 109. | திரு. யு. எல். ஷரீப் | 13575 | 6667 |
| 110. | திரு. புஹாரி | 13758 | 6667 |
| 111. | திரு. ரம்சான் | | |
| 112. | திரு. ஹுமைஸ் | | |
| 113. | திரு. அப்துல் காதர் | | |

5-638

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.